### காட்டாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட

# லாரி ஓட்டுநர்கள் இருவரின் குடும்பத்திற்கு - தலா ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 27-

கர்நாடகா மாநிலம், வட கன்னட மாவட்டம், அங்கோலா வட்டம், சிரூரு பகுதியில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் காட்டாற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த லாரி ஓட்டுநர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

நாமக்கல் மாவட்டம், புதுச்சத்திரம் குறுவட்டம், தாத்தையங்கார்பட்டி கிராமத்தைச் சேர்ந்த சின்னன்னன் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை உள்வட்டம், எம். வெள்ளாப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த முருகன் ஆகிய இருவரும் கடந்த 16.07.2024 அன்று எல்.பி.ஜி. டேங்கர் லாரியில் ஓட்டுநர்களாக சென்றபோது கர்நாடகா மாநிலம், வடகன்னட மாவட்டம், அங்கோலா வட்டம், சிரூரு பகுதியில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் காட்டாற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன். மேலும், இந்த விபத்தில் உயிரிழந்த லாரி ஓட்டுநர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !




### தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# விருதுநகரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் - அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!

*விருதுநகர், ஜூலை 27-*

விருதுநகர் மாவட்டச் செயலாளர்கள் தெற்கு - அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், வடக்கு - அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-





கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி, "ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக்" கண்டித்து இன்று (27.07.2024-சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் விருதுநகர், மாரியம்மன் கோவில் திடலில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறவுள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் விருதுநகர் தெற்கு/வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாநில/மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### விழுப்புரத்தில் ஒன்றிய

# பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

*விழுப்புரம்,ஜூலை.27-*

விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர் , மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க , ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க ஒன்றிய அரசை கண்டித்து விழுப்புரம் தெற்கு மாவட்டம் (ம) விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (27.07.2024 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில்

விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அவர்களின் தலைமையிலும், விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் அவர்களின் முன்னிலையிலும் நடைபெறுகிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் சிவா , டாக்டர் இரா. இலட்சுமணன் மற்றும் மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் கண்டன உரையாற்ற உள்ள இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் வார்டு கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு ஒன்றிய அரசிற்கு எதிராக குரல் கொடுக்க அலைகடலென திரண்டு வாரீர் என கேட்டுக்கொள்கிறேன்.



இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கடலூர் மேற்கு மாவட்டக் கழகம் சார்பில்

# விருத்தாசலத்தில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிவிப்பு!

*விருத்தாசலம், ஜூலை 27-*

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் பா.ஜ.க அரசை கண்டித்து கடலூர் மேற்கு மாவட்டம் சார்பில் விருத்தாசலத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் விருத்தாசலம் கடலூர் நெடுஞ்சாலை இன்று (27.07.2024 - சனிக்கிழமை) காலை 10:00 மணியளவில் மாவட்டக் கழக அவைத்தலைவர் டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் விருத்தாசலம் கோட்டாட்சியர் அலுவலகம் அருகில் நடைபெறுகிறது.

அதுசமயம், ஆர்ப்பாட்டத்தில் கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த , மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள் இந்நாள் ஒன்றிய பெருந்தலைவர்கள், நகரமன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக் குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் , வார்டு கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக் குழு, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள்அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.



இவ்வாறு கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ஆ.இராசா எம்.பி.- அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

# பெரம்பலூர் மாவட்டத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் அறிக்கை!

*பெரம்பலூர், ஜூலை 27-*

பெரம்பலூர் மாவட்டத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று நடைபெறும் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொள்கின்றனர் என்று மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க, ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க ஒன்றிய அரசைக் கண்டித்து, பெரம்பலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (27.07.2024 - சனிக்கிழமை) காலை 10 மணி அளவில் பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம், காந்தி சிலை அருகில்

பெரம்பலூர் மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர் வரவேற்புரையில் நடைபெறுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி. போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கே.என்.அருண்நேரு எம்பி., மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். இதில் மாநில நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள்,

வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு ஒன்றிய அரசிற்கு எதிராக குரல் கொடுக்க அலைகடலென திரண்டு வாரீர் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பெரம்பலூர் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

# நாமக்கல்லில் இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் - கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. - எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை!

*நாமக்கல், ஜூலை 27 -*

நாமக்கல் கிழக்கு மேற்கு மாவட்டம் சார்பில் ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து இன்று (ஜூலை 27) நாமக்கல் தொலைபேசி நிலையம் முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது என நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார், நாமக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் ஆகியோர் கூட்டாக அறிவித்துள்ளனர்.

அவர்களின் அறிக்கை வருமாறு:-





தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கையில் மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி மற்றும் தமிழ்நாடு சந்தித்த இரண்டு பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்க வேண்டும் என. தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன் வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச, பா.ஜ.க. அரசை கண்டித்து தலைமை கழகம் அறிவிப்பிற்கு இணங்க மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாமக்கல் மாவட்டம் சார்பில் இன்று (27.07.2024 - சனிக்கிழமை) காலை 10.00 மணி அளவில் மோகனூர் சாலையில் அமைந்துள்ள தொலைபேசி நிலையம் முன்பு நடைபெறும் என நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் தலைமையில், நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில், மாநிலங்களவை குழுத்தலைவரும், கழக கொள்கைபரப்பு செயலாளருமான திருச்சி சிவா சிறப்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், மாவட்ட கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், பிரதிநிதிகள், அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக தொண்டர்கள் என அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

### ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டை வஞ்சித்த

# பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து ஒசூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## கிருஷ்ணகிரி மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ. அறிக்கை!

*கிருஷ்ணகிரி, ஜூலை 27-*

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒரு நாட்டின் நிதிநிலை அறிக்கை என்பது இந்தியத் திருநாட்டின் அனைத்து மாநிலங்களுக்கும் உரிய பங்கினை பகிர்ந்தளித்து நாடு முழுவதும் சமச் சீரான வளர்ச்சியை உருவாக்கிட உதவுவதுடன், நாட்டில் வாழும் கடைக்கோடி மனிதர்களின் வாழ்வை மேம்படுத்தும் கொள்கை பிரகடனமாகவே இருக்க வேண்டும். ஆனால் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை ஒட்டுமொத்த இந்திய நாட்டிற்கான நிதிநிலை அறிக்கையாக தெரியவில்லை மாறாக தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது.

மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது.

ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. ஒன்றிய அரசைக் கண்டித்து இன்று (ஜூலை 27 ம் தேதி சனிக்கிழமை) காலை 10 மணியளவில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ், எம்.எல்.ஏ. தலைமையில் ஒசூர் ராம் நகர் அண்ணா சிலை அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை முன்பு "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெற உள்ளது.



இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள், மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்ட ஊராட்சி குழு, மாநகர, ஒன்றிய குழு, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர்கள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள், ஊராட்சி தலைவர்கள், துணை தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், BLA 2, BLC உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் திரளாக கலந்து கொண்டு தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.